

ஊ.ந.த.எண் 1/2023 நாள்: 15.5.2023-ன் மனைபிரிவு அங்கீகரிக்கப்பட்டது

தலைவர்
கோவிந்தம்பாளையம் ஊராட்சி

கோவிந்தம்பாளையம் ஊராட்சி தலைவர் சேலம் (Dt) தலைவாசல் ஒன்றியம்

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
சேலம் மாவட்டம்
தலைவாசல் ஊராட்சி ஒன்றியம்

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டம், கோவிந்தம்பாளையம் ஊராட்சி/கிராமம், சர்வேஎண்- 37/4B, 5A -ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம். (திட்டமில்லாத பகுதி)

கோப்பு எண்	:	SLM / ZO63GL96 / 8064 / 2023
இணையதள விண்ணப்பம் எண்	:	ZO63GL96
அளவு	:	1 : 400

I. குறிப்பு:

மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு..... : 4.32 ½ ஏக்கர் (அ) 17492.54 சமீ

மனைப்பிரிவு சாலைகள் மற்றும் மூலைமுடக்குகள் பரப்பு : 4996.10 சமீ

மனைப்பிரிவு எல்லை.....

நிலையில் உள்ள சாலை.....

உத்தேச சாலை .....

கோரிய மனைகள்..... : 96

ஒதுக்கிய மனைகள்..... : 97

ஒதுக்கப்பட்ட EWS மனைகளின் பரப்பு (EWS மனை எண்கள் 38 to 50, 75 to 87) : 1286.56 சமீ (10.29%)

A) பொது ஒதுக்கீடு உள்ளாட்சிக்கு மனுதாரரால் ஒப்படைக்கப்பட்டவை

1. உத்தேச சாலைகள் மற்றும் மூலைமுடக்குகளின் பரப்பளவு : 4996.10 சமீ
2. பூங்கா பரப்பு : 1265.12 சமீ (10.12%)

B) பொது உபயோகம்

TNCD & BR 2019, 47 (B)-ன் படி தானமாக ஒப்படைக்கப்பட்டவை

1. உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்டவை (PP1) பொது உபயோக மனைபரப்பு : 69.54 சமீ (0.55 %)
2. TANGEDCO -விற்கு ஒப்படைக்கப்பட்டவை (PP2) பொது உபயோக மனைபரப்பு : 69.58 சமீ (0.55 %)

மூலை முடக்கு

12.0மீ அகல சாலை வரைக்கும் 1.5மீ X 1.5மீ மூலை முடக்கு விடப்பட வேண்டும்.

குறிப்பு:

அனைத்து அளவுகளும் மீட்டரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

II நிபந்தனைகள்:

1. அரசாணை எண் -18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA-1) நாள் 04.02.2019 -ன் படி நிபந்தனைகள் கடைபிடிக்கப்பட வேண்டும்.
2. அரசாணை எண் -16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA-1) நாள் 31.01.2020 -ன் படி நிபந்தனைகள் கடைபிடிக்கப்பட வேண்டும்.
3. அரசாணை எண். 181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள் - 09.12.2020 -ன் படி நிபந்தனைகள் கடைபிடிக்கப்பட வேண்டும்.
4. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்தன்மையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், எந்தத்துறைக்காகவும் நில ஆர்ஜிதப் படியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், உள்ளாட்சி உறுதி செய்ய வேண்டும்.
5. நிலஉரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால், மனைப்பிரிவுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதில் ஏதேனும் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர்-ஆணையர் அவர்களால் இரத்து செய்யப்படும்.
6. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர்-ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்களையும் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
7. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி-திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் மிகையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப் படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் நீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
8. நீர் நிலைகள் பாதிக்கப்படாத வண்ணம் கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும்.
9. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைப்படத்தினை எவ்வித மாற்றமும் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் ex-x அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
10. நீதிமன்ற வழக்குகள் ஏதேனும் நிலுவையில் இருப்பின் இத்துறையின் அனுமதி செல்லதக்கதல்ல.
11. இம்மனைப்பிரிவிலிருந்து அருகில் உள்ள இடத்திற்கு செல்வதற்கு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு சாலைகளின் குறுக்கே மனைப்பிரிவு சாலையின் போக்கினை பாதிக்கும் வகையில் கற்றுச்சுவர் கட்டப்பட்டிருப்பின் அதனை அகற்றப்பட வேண்டும்.
12. உத்தேச மனைப்பிரிவு சாலைகளுக்கு மனுதாரரால் தார் சாலை அமைக்கப்பட்டு (BBMS) வடிகால் வளர்ச்சி அலுவலர் / யூனியன் பொறியாளர் அவர்களிடம் தாம் குறித்து தகுதிச்சான்று பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
13. உத்தேச மனைப்பிரிவின் உள்ளே LT Line, HT Line ஆகியன செல்லுமானால் அவைகளை சாலையின் போக்கிற்கு ஏற்றவாறு மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

APPROVAL No. : SWP / DTCP / SALEM / LAYOUT No. : 162 / 2023

உதவி இயக்குநர் (மு.கூ.பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
சேலம் மாவட்டம்.

Document certified by Shahana Abdul Kalam.
Signed by: Assistant Director
Location: Salem
Date: 2023.[illegible] 17:27:18